# P.L.RAJ IAS & IPS ACADEMY

**Building Bureaucrats Since 2006**

## July 26, 2026 – தினமணி செய்தித்தாள் - சிறு துணுக்கள்

1. ஹெச்-1பி நுழைவு இசைவு (விசா) கட்டணத்தை ஆண்டுக்கு ஒரு லட்சம் டாலராக (ரூ. 96 லட்சம்) டிரம்ப் நிர்வாகம் உயர்த்தியதை அமெரிக்க உயர்நீதிமன்றம் ரத்து செய்து பிறப்பித்த உத்தரவுக்கு இடைக்காலத் தடை விதிக்க அமெரிக்க மேல்முறையீட்டு நீதிமன்றம் மறுத்தது.

   i. அமெரிக்க அரசின் மேல்முறையீட்டை நிராகரித்து பாஸ்டன் நகரில் உள்ள மேல்முறையீட்டு நீதிமன்றத்தின் 3 நீதிபதிகள் அமர்வு பிறப்பித்த உத்தரவில் கூறியிருப்பதாவது:

   - ஹெச்-1பி நுழைவு இசைவு (விசா) கட்டணத்தை ஆண்டுக்கு ஒரு லட்சம் டாலராக டிரம்ப் நிர்வாகம் உயர்த்தியதற்கு எதிராக, அமெரிக்காவின் 20 மாகாணங்களைச் சேர்ந்த குழுக்கள் சார்பில் உயர்நீதிமன்றத்தில் முன்வைத்த வாதத்தை மேல்முறையீட்டு நீதிமன்றம் ஏற்றுக்கொள்கிறது.
   - இங்கு எழும் கேள்வி, நுழைவு இசைவு கட்டணத்தை உயர்த்தும் அதிகாரத்தை அமெரிக்க நாடாளுமன்றம் அதிபருக்கு வழங்க முடியுமா என்பதல்ல; மாறாக, அவ்வாறு வழங்கியதா? என்பதாகும்.
   - எனவே, நுழைவு இசைவு கட்டண உயர்வுக்கு எதிராக உயர் நீதிமன்றம் பிறப்பித்த உத்தரவுக்கு இடைக்காலத் தடை விதிக்க மறுக்கிறோம் என்று தீர்ப்பளித்தனர்.
   - இது அமெரிக்க அதிபர் டொனால்ட் டிரம்ப் தலைமையிலான அரசு நிர்வாகத்துக்கு பெரும் பின்னடைவாகப் பார்க்கப்படுகிறது.
   - உலகம் முழுவதும் இருந்து திறமையான தொழில்நுட்ப நிபுணர்களைத் தேர்வு செய்து அவர்களுக்கு அதிக ஊதியத்துடன் அமெரிக்காவில் வேலை வழங்க ஹெச்-1பி நுழைவு இசைவு நடைமுறையை அந்த நாட்டு நிறுவனங்கள் பயன்படுத்தி வருகின்றன. இந்தத் திட்டத்தின் மூலம் அமெரிக்கா சென்று தகவல் தொழில்நுட்பத் துறையில் ஏராளமான இந்தியர்கள் பணியாற்றி வருகின்றனர். இதில், சிறப்பாகப் பணியாற்றுபவர்கள் நிரந்தரக் குடியுரிமை பெற 'கிரீன்கார்டு' வழங்கப்படும் வாய்ப்புள்ளது.
   - இந்தச் சூழலில், அமெரிக்க வேலைவாய்ப்பில் அமெரிக்கர்களுக்கு

முன்னுரிமை என்ற கொள்கையின் கீழ், ஹெச்-1பி நுழைவு இசைவு கட்டணத்தை அமெரிக்க அதிபர் டிரம்ப் பல மடங்காக 'உயர்த்தி கடந்த ஆண்டு செப்டம்பரில் உத்தரவிட்டார்.

- அதன்படி, 2,000 முதல் 5,000 டாலராக இருந்த ஹெச்-1பி நுழைவு இசைவு கட்டணத்தை, ஆண்டுக்கு ஒரு லட்சம் டாலர் என்ற அளவில் உயர்த்தி உத்தரவிட்டார். இந்தக் கட்டண உயர்வு கடந்த ஆண்டு செப்டம்பர் 21- ஆம் தேதிமுதல் அமலுக்கு வந்தது.
- இந்தக் கட்டண உயர்வுக்கு எதிராக அமெரிக்காவின் 20 மாகாணங்களைச் சேர்ந்த குழுக்கள் சார்பில் மாசசூசெட்ஸ் மாகாணம் பாஸ்டனில் உள்ள உயர்நீதிமன்றத்தில் வழக்கு தொடரப்பட்டது. 'அதிபர் டிரம்ப் அரசு குடியேற்றக் கொள்கை மற்றும் வரிகளை நிர்ணயிப்பதில் நாடாளுமன்றத்துக்கு உள்ள அதிகாரத்தை அபகரித்துள்ளது' என்று மனுதாரர்கள் தரப்பில் வாதிடப்பட்டது.
- இந்த வாதத்தை கடந்த ஜூன் 8- ஆம் தேதி ஏற்ற உயர்நீதிமன்றம், 'அமெரிக்க நாடாளுமன்றத்தின் ஒப்புதலைப் பெறாமல் ஹெச்-1பி நுழைவு இசைவு கட்டணத்தை உயர்த்தியது சட்டவிரோதமானது' என்று குறிப்பிட்டு, கட்டணத்தை ஆண்டுக்கு ஒரு லட்சம் டாலராக உயர்த்தியதை ரத்து செய்து உத்தரவிட்டது.

ii. ஹெச்-1பி விசாவுக்கு எதிராக மேலவையில் மசோதா:

- ‘ஹெச்-1பி நுழைவு இசைவுக்கு எதிராக அமெரிக்க நாடாளுமன்ற சட்ட மேலவையில் (செனட்) தனி நபர் மசோதா ஒன்று தாக்கல் செய்யப்பட்டது.
- அமெரிக்காவின் மோன்டானா மாகாணத்திலிருந்து ஆளும் குடியரசுக் கட்சி சார்பில் மேலவைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்ட டிம்ஷீஹி சார்பில் தாக்கல் செய்யப்பட்ட அந்த மசோதாவில், 'பல்வேறு துறைகளில் சிறப்பு நிபுணத்துவம் பெற்ற நிபுணர்களின் பற்றாக்குறையை பூர்த்தி செய்யும் நோக்கிலேயே ஹெச்-1பி விசா திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டது. ஆனால், தகுதி பெற்ற கடினமாக உழைக்கும் அமெரிக்கர்களுக்கு மாற்றாக, குறைந்த ஊதியத்தில் வெளிநாட்டு தொழிலாளர்களைப் பணியமர்த்த இந்த நுழைவு இசைவு திட்டம் பயன்படுத்தப்படுகிறது. இதுபோல அமெரிக்க தொழிலாளர்களின் உரிமைகளை எளிதாகப் பறிக்க இந்த நுழைவு இசைவு பயன்படுத்தப்படக் கூடாது.
- எனவே, ஹெச்-1பி நுழைவு இசைவு விநியோகத்தை 3 ஆண்டுகளுக்கு

நிறுத்திவைக்க வேண்டும். அதன் பிறகு, கடுமையான விதிமுறைகளுடனும், உயர் தரங்களுடனும் இந்த நுழைவு இசைவு திட்டம் மீண்டும் அறிமுகப்படுத்தப்பட வேண்டும். அதோடு, அதிபர் டிரம்ப் நிர்ணயித்த, ஆண்டுக்கு ஒரு லட்சம் டாலர் கட்டணத்தையும் ஹெச்-1பி நுழைவு இசைவுக்கு நிர்ணயம் செய்ய வேண்டும்' என்று குறிப்பிட்டுள்ளார்.

2. நீட் வினாத்தாள் கசிவு விவகாரத்துக்குப் பொறுப்பேற்று மத்திய கல்வித் துறை அமைச்சர் தர்மேந்திர பிரதான் தனது பதவியை ராஜிநாமா செய்தார்.
   i. தில்லியில் கரப்பான்பூச்சி ஜனதா கட்சி (சிஜேபி) தலைமையில் மாணவர்கள்-இளைஞர்கள் நடத்திய தொடர் போராட்டம் எதிரொலியாக, தர்மேந்திர பிரதான் பதவி விலகினார். பிரதானின் ராஜிநாமா உள்பட சிஜேபியின் அனைத்துக் கோரிக்கைகளையும் மத்திய அரசு ஏற்றுக் கொண்டதையடுத்து, தில்லியில் கடந்த 36 நாள்களாக நீடித்த போராட்டம் திரும்பப் பெறப்பட்டது.

3. தென் சீனா மற்றும் ஹாங்காங்கை நெருங்கி வரும் 'நெளல்' புயல் காரணமாக, அப்பகுதியில் மக்களின் இயல்பு வாழ்கை பாதிக்கப்பட்டுள்ளது.
   i. இம்மாதத் தொடக்கத்தில் இருந்து சீனாவைத் தாக்கும் 3- ஆவது புயல் இதுவாகும். தென் சீனக் கடலின் வடகிழக்குப் பகுதியில் மணிக்கு 140 கி.மீ. வேகத்தில் நகர்ந்து வரும் இப்புயல், சீனாவின் குவாங்டாங் மாகாணத்தில் ஞாயிற்றுக்கிழமை (ஜூலை 26) கரையைக் கடக்கிறது.

4. சவூதி அரேபியா அரசுக்குச் சொந்தமான 'அராம்கோ' எண்ணெய் நிறுவனத்தின் 2 நிலையங்களைக் குறிவைத்து யேமனின் ஈரான் ஆதரவு ஹூதி கிளர்ச்சியாளர்கள் வான்வழித் தாக்குதல்களை நடத்தினர்.
   i. செங்கடலையும், ஏடன் வளைகுடாவையும் இணைக்கும் பாப் அல் மண்டேப் நீரிணை வழியே சவூதி தொடர்புடைய கப்பல்களுக்குத் தடை விதிப்பதாக ஹூதிக்கள் கடந்த திங்கள்கிழமை அறிவித்தனர். தொடர்ந்து, சவூதி எண்ணெய்யுடன் செங்கடல் வழியாக பயணித்த 2 எண்ணெய் கப்பல்கள் மீது கடந்த வியாழக்கிழமை தாக்குதல் நடத்தினர்.
   ii. உலகளாவிய கடல்வழி வர்த்தகத்தில் சுமார் 12 சதவீதமும், கன்டெய்னர் போக்குவரத்தில் 25 சதவீதமும் நடைபெறும் இந்த முக்கிய நீரிணையில் ஹூதிக்களின் அச்சுறுத்தல் கப்பல் போக்குவரத்தைப் பாதித்தது.

iii. இந்நிலையில், யேமனின் முக்கியத் துறை முக நகரான ஹொடைடாவில், வணிகக் கப்பல்களுக்கு அச்சுறுத்தலாக இருந்த ராணுவ இலக்குகள் மீது சவூதி கூட்டுப் படைகள் வான்வழித் தாக்குதல் நடத்தின. இதற்குப் பதிலடியாக, செங்கடலை ஒட்டிய சவூதி அரேபியாவின் யான்பு, ஜீஸான் துறைமுக நகரங்களில் உள்ள அராம்கோ எண்ணெய் சுத்திகரிப்பு மற்றும் சேமிப்பு நிலையங்களைக் குறிவைத்ததாக ஹூதிக்கள் தெரிவித்தனர்.

iv. அமெரிக்கா-ஈரான் மோதலால் ஹோர்முஸ் நீரிணை முடக்கப்பட்டுள்ளதன் காரணமாக, சவூதி அரேபியா தனது பெரும் எண்ணெய் ஏற்றுமதியை செங்கடலில் உள்ள யான்பு துறைமுகத்துக்கு மாற்றியுள்ளது.

5. காமன்வெல்த் போட்டியில் இந்தியாவின் முதல் பதக்கத்தை பெற்றுத் தந்தார் பாரா பவர் லிஃப்டர் ஜண்டு குமார்.

i. ஸ்காட்லாந்தின் கிளாஸ்கோ நகரில் காமன்வெல்த் போட்டிகள் தொடங்கி நடைபெற்று வருகின்றன. இதில் பாரா பவர்லிஃப்டிங் போட்டியில் இந்தியாவின் ஜண்டு குமார் 190 கிலோ எடையை தூக்கி வெண்கலம் வென்றார். இது இந்தியாவுக்கு காமன்வெல்த்தில் முதல் பதக்கமாக அமைந்தது.

6. புகாரெஸ்ட் பொருளாதார ஆய்வுகள் பல்கலைக்கழகம் திரௌபதி முர்முவுக்கு கௌரவ டாக்டர் பட்டத்தை வழங்கியது.

i. சரியாக ஒரு நூற்றாண்டுக்கு முன்னர் 1926, நவம்பர் மாதம் இங்கு வந்த ரவீந்திரநாத் தாகூர் புகாரெஸ்ட் தேசிய அரங்கில் உரையாற்றினார். அப்போது இந்தியர்களின் சிந்தனைத் திறனை ருமேனியா மக்கள் நன்றாக புரிந்துகொண்டது அவரை வியப்பில் ஆழ்த்தியது.

ii. ருமேனியா தேசியக் கவிஞர் மிஹாய் எமினெஸ்கு மாணவர் பருவத்தில் உபநிடதங்கள் மற்றும் பகவத் கீதையை ஆழமாக கற்றார். அது பின்னாளில் அவரது எழுத்துகளுக்கு மேலும் வலுசேர்த்தது. இதுவே உலகை ஒரே குடும்பமாக எண்ணும் இந்தியாவின் ‘வசுதைவ குடும்பகக்' கொள்கையாகும்' என்றார்.

7. ஐ.நா. அமைப்பான யுனெஸ்கோவின் பாரம்பரிய சின்னங்கள் பட்டியலில் உத்தரபிரதேச மாநிலத்தில் உள்ள தொன்மை வாய்ந்த சாரநாத்பௌத்த

தலம்சேர்க் கப்பட்டுள்ளது. யுனெஸ்கோவின் இந்த முடிவுக்கு பிரதமர் மோடி பெருமிதம் தெரிவித்துள்ளார்.

i. தென்கொரியாவின் பூசன் நகரில் யுனெஸ்கோ அமைப்பின் உலக பாரம்பரியக் குழுவின் 48ஆவது அமர்வு நடைபெற்று வருகிறது. யுனெஸ்கோ பாரம்பரிய சின்னங்கள் பட்டியலில் சாரநாத் பௌத்த தலத்தை சேர்ப்பது என்று இக்கூட்டத்தில் முடிவு செய்யப்பட்டது. இப்பட்டியலில் இடம் பெற்றுள்ள இந்தியாவின் 45ஆவது இடம் இதுவாகும்.

ii. யுனெஸ்கோவின் பாரம்பரிய சின்னங்கள் பட்டியலில் உத்தர பிரதேச மாநிலத்தில் உள்ள தொன்மை வாய்ந்த சாரநாத் பௌத்ததளம் சேர்க்கப்பட்டுள்ளது. புத்தருடன் நெருங்கிய தொடர்புடையது சாரநாத் ஞானம், இரக்கம், நல்லிணக்கம் தொடர்பான புத்தரின் செய்தி உலகுக்கே ஊக்கசக்தியாக விளங்குகிறது.